**O.S.No.363/2012**

**Date:17/06/2019**

**வா.சா-1 மல்லிகா, க.பெ.சண்முகம்.**

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

பிரதிவாதிகள் மீது என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாதை கேட்டு தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கு சொத்தின் சர்வே எண் என்ன என்றால் தெரியாது. எவ்வளவு விஸ்தீரணமுடைய இடத்திற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தென்வடலில் 3 அடி அகலம், கிழமேலில் 20 அடி. அந்த தாவா சொத்து யாருடைய பட்டா இடத்தில் உள்ளது என் இடத்தில் உள்ளது. அந்த இடம் நான் ஜெயாவிடமிருந்து கிரையம் வாங்கிய கிரையப் பத்திரத்தின்படியான இடத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய பத்திரத்தில் தெற்கு பக்கம் நான்கு மாலாக அழகம்மாள் வீடு என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் எனக்கு படிக்க தெரியாது, அந்த இடத்தின் பக்கத்தில் யார் உள்ளார் என்றால் ஒரு வீடு உள்ளது, யாருடைய வீடு என்று எனக்கு தெரியாது. என் வீட்டின் மேற்கு பக்கத்தில் ராஜகோபால் என்பவர் வீடும், சந்தும் உள்ளது என்றால் சரிதான். எங்கள் வீட்டின் கிழக்கு பக்கம் பிரதிவாதிகள் வீடு என்றால் சரிதான். வா.சா.ஆ.2 கிரைய பத்திரத்தில் தெற்கு பக்கம் பாதை எதுவும் இருப்பதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய இடம் மொத்தம் 285 சதுர அடி விஸ்தீரணமுடைய இடம் என்றால் ஒரு செனட் என்று சொன்னார் அது தான் எனக்கு தெரியும். ஜெயா அந்த சொத்தை அய்யாவு என்பவரிடமிருந்து வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் மூலம் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். அந்த ஜெயாவும் 285 சதுரஅடி இடத்தை தான் கிரையம் வாங்கினார் என்றால் தெரியாது. வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தில் தெற்கு பக்கம் பாதை இருப்பதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. அய்யாவு வெள்ளைக்கண்ணு வகையறாவிடமிருந்து அந்த சொத்தை கிரையம் வாங்கினார் என்றால் தெரியாது. அய்யாவு 285 சதுரஅடி இடத்தை தான் வெள்ளைக்கண்ணு வகையறாவிடமிருந்து கிரையம் வாங்கினார் என்றால் தெரியாது. பொதுவாக ஒரு நபர் கிரையம் வாங்கும் போது அதே விஸ்தீரணத்தையோ அல்லது அதற்கு குறைவான விஸ்தீரணத்தையோ தான் விற்கமுடியும் என்றால் சரிதான். கிரைய பத்திரத்தில் கட்டுப்படாத இடத்தை சேர்த்து விற்க இயலாது என்றால் சரிதான். அய்யாவு 1977-ல் வாங்கிய கிரைய பத்திரத்தை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து ஜெயா எனக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் மற்றும் அய்யாவு ஜெயாவுக்கு

**O.S.No.363/2012, Date:17/06/2019, வா.சா-1 மல்லிகா, க.பெ.சண்முகம்.**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் இந்த பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. என் வீட்டிற்கு வாசல் தெற்கு பக்கம் உள்ளது என்றால் சரிதான். என் வீட்டிற்கு மேற்கு பக்கம் உள்ள சந்து பக்கமாக தான் நான் புழங்குகிறேன் என்றால் தற்காலிகமாக அந்த வழியை பயன்படுத்திக் கொண்டிருக்கிறேன். அந்த தென்வடல் சந்தின் முடிவில் நகராட்சியின் கழிவுநீர் வாய்க்கால் செல்கிறது என்றால் சரிதான். என் வீட்டின் கழிவுநீரை குழாய் பதித்து நான் அந்த வாய்க்காலில் தான் விடுகின்றேன் என்றால் ஆரம்பத்தில் அது வழியாகத் தான் சென்றது, ஆனால் பிரதிவாதிகள் அதை 2012-ம் வருடம் இடித்து விட்டதால் கழிவு நீரை மோந்து வெளியே ஊற்றுகிறோம். என் வீட்டின் சுவரும், பிரதிவாதிகளின் வீட்டின் சுவரும் ஒட்டிதான் உள்ளது என்றால் சரிதான். கிழக்கு பக்கத்தில் அந்த இரு சுவற்றிற்கும் இடையே சந்து கிடையாது என்றால் சரிதான். 1-ம் பிரதிவாதி என்ன சர்வே எண்ணில் எவ்வளவு இடம் வாங்கியுள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 1-ம் பிரதிவாதி தன் இடத்தை வாங்கிய கிரைய பத்திரத்தில் தெற்கு பக்க எல்லையாக கருப்பாயி வீடு தான் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், சந்து பாதை இருப்பதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. 1-ம் பிரதிவாதியின் வீட்டிற்கு தெற்கு பக்கம் வாசல் என்றால் கிழக்கு மற்றும் தெற்கு பக்கங்களில் வாசல் உள்ளது. பிரதிவாதிகள் தங்கள் வீட்டினுள் நுழைவதற்கு தாவா சொத்தை தான் பாதையாக பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் நானும், அவர்களும் அந்த தாவா சொத்தை தான் பாதையாக பயன்படுத்தி வருகிறோம். தாவா சொத்து பாதையில் பிரதிவாதிகளின் குளியலறை மற்றும் கழிப்பறை உள்ளது என்றால் பிரதிவாதிகள் தற்போது தான் பாதையை அடைத்துவிட்டு குளியலறை மற்றும் கழிப்பறை கட்டி பயன்படுத்தி வருகிறார்கள். அந்த குளியலறையை ஒட்டி பிரதிவாதிகள் தென்வடல் சுவர் எழுப்பியுள்ளார்கள் என்றால் பாதையை மறைத்து சுவர் கட்டியுள்ளார்கள். அந்த குளியலறையிலிருந்து தண்ணீர் வெளியேற பிரதிவாதிகள் குழாய் பதித்துள்ளார்கள் என்றால் சுவர் எழுப்பியதால் தெரியவில்லை. என் வீட்டு கழிவு நீர் குழாயை, பிரதிவாதிகள் வீட்டின் கழிவுநீர் குழாயோடு இணைக்கும் போது தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. என் சொந்த ஊர் எது என்றால் கொடுக்கம்பட்டி. என் சொந்த ஊரில் எனக்கு நிலங்கள் உள்ளது என்றால் சரிதான். நான் விவசாயம் செய்வதற்காக கொடுக்கம்பட்டியில் சென்று தங்கியிருப்பேன் என்றால் அவ்வப்போது விவசாயம் செய்வதற்காக சென்று தங்காமல் வீடு திரும்பி விடுவேன். எந்த தேதியில் யார் யாரை வைத்து என் கணவர் பிரதிவாதிகள் செய்த பிரச்சனை தொடர்பாக பஞ்சாயத்து வைத்தார் என்றால் தேதி தெரியாது, ஆட்கள்

**O.S.No.363/2012, Date:17/06/2019, வா.சா-1 மல்லிகா, க.பெ.சண்முகம்.**

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

பெயர் தெரியாது. நான் சொல்வது போல் சுவர் எழுப்பிய பிரச்சனை தொடர்பாக பஞ்சாயத்து எதுவும் வைக்கவில்லை என்றால் நாங்கள் பஞ்சாயத்து எதுவும் வைக்கவில்லை, அவர்கள் தான் ஆட்கள் அழைத்து வந்து பேசினார்கள். நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த பொழுது போலீசார் இடத்தை வந்து பார்த்தார்களா என்றால் பார்த்தார்கள். போலீசார் இடத்தை பார்வையிட்டு அது பிரதிவாதிகளின் பட்டா இடம் என்பதால் தான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் நான் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அந்த புகாரின் அடிப்படையில் வருவாய்த் துறையினர் இடத்தை அளந்தார்களா என்றால் அளந்தார்கள். வருவாய்த் துறையினர் அந்த இடத்தை வந்து பார்த்துவிட்டு அது பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்பதால் தான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. (சாட்சி இந்த பதிலை கூறும் போது அழுதுவிட்டு கூறினார்) நானோ, நான் கிரையம் பெற்ற நபர்களோ தாவா இடத்தை சந்து பாதையாக எக்காலத்திலும் பயன்படுத்தவில்லை என்றாலும், அந்த பாதையில் உள்ள குளியலறை, குறுக்கு சுவர் இவையனைத்தும் பிரதிவாதிகள் வீடு கட்டும் போதே கட்டப்பட்டது என்றாலும், தாவா சொத்து பிரதிவாதிகளின் பட்டா இடத்தில் இருப்பதால் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.